Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

போன்: 389 தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 7 ஆம் நாள் ஐ. அவ்வல் 12 (23-10-61) திங்கட்கிழமை இதழ் 215

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14,டாம் வீதி, கொழும்பு.

# அபின் கடத்த முயன்றவர்

# கைது

## ரயில் நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புக்கு அபின் கடத்திச்செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் ஒருவரை நேற்று யாழ்ப்பாணம் ரயில்நிலையத்தில் யாழ்ப்பாணம் பொலிசார் கைதுசெய்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என். அருளானந்தம் என்பவர் நேற்று மாலை கொழும்புக்குப் புறப்பட்ட ரயிலில் ஏழு இருத்தல் அபினைக் கடத்திச்செல்ல முயற்சிசெய்ததாகவும் தகவல் கிடைத்ததன்பேரில் யாழ்ப்பாணம் பொலிசார் ரயில்நிலையத்துக்குச் சென்று அவர்வசம் இருந்ததாகக் கருதப்படும் ஏழு இருத்தல் அபினையும் கைப்பற்றியதுடன் அவரையும் கைது செய்ததாகவும் அறியப்படுகிறது.

## ஆங்கிலத்தை அலட்சியம் செய்யக்கூடாது

### பரிசளிப்புவிழாவில்பேராசிரியர்உரை

கண்டி, ஞாயிறு

"எதிர்கால வேலை வாய்ப்புக்குச் சந்தர்ப்பமில்லாமலும், வேறு எவ்வித நோக்கமுமில்லாமலும் ஏராளமான எஸ். எஸ். ஸி., ஜி. ஸி. ஈ. மாணவர்களை உற்பத்தி செய்யும் நிலைக்குக் கல்விநிலை வந்திருப்பதே ஒழுங்கீனத்திற்குக் காரணம்" என சர்வகலாசாலை வைத்தியத் துறைத் தலைவரான பேராசிரியர் ஓ. ஈ. ஆர். அபயரத்தின சென் அந்தனீஸ் கல்லூரிப் பரிசளிப்பில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

"நாட்டில் இப்போது மூன்று வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. சுயபாஷையில் மட்டுமே போதிக்கப்பட வேண்டுமென ஒரு சாரார் கருதுகின்றனர். ஆங்கிலத்தை இரண்டாவது பாடமாகப் போதிக்க வேண்டுமென்பது மற்றோர் சாராரின் கருத்தாகும். ஆங்கிலத்தில் மட்டுமே போதனை இருக்க வேண்டுமென்பது மூன்றாவது சாராரின் கருத்து" என்றும் அவர் கூறினர்.

"நமக்குத் தேவையானது என்ன? சிறந்த சுயபாஷைக் கல்வியும் நமக்கு அத்தியாவசியம். ஆனல் ஆங்கிலத்தை அலட்சியம் செய்துவிடக் கூடாது" என்று அவர் குறிப்பிட்டார்.

## சிறுகதை எழுத்தாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி எரிதிடல் புதிய அரசினர் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்ற சிறுகதை எழுத்தாளர் திரு. டொமினிக் ஜீவாவுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடாத்தப்பட்டது. திரு. கே. நடராசா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் எஸ். சின்னையா, வி. கே. பாலசிங்கம், எஸ். இராசதுரை, பி. சபாபதி ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

திரு. ஜீவா தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

## மாணவிகளுடன் ஒழுங்கீனமாய் நடக்கும் ஆசிரியர்கள்

கொழும்பு, ஞாயிறு

மாணவ, மாணவிகளுடன் ஒழுக்கக்கேடாக நடந்துகொள்ளும் ஆசிரியர்களைச் சேவையிலிருந்து விலக்குவதென கல்வி அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

இவ்வித ஒழுங்கீனமான நடத்தைபற்றிக் கடந்த சிலமாதங்களாகவே கல்வி இலாகாவுக்கு ஏராளமான புகார்கள் கிடைத்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

## புதிய தொழில்களுக்கு ரூபாய் 3 கோடி

கொழும்பு, ஞாயிறு

இப்போது இறக்குமதியாகாமலிருக்கும் பல்வேறு ஆடம்பரப் பொருள்கள், பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய பெருந்தொகையான இலங்கை வர்த்தகர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் கைத்தொழில் அமைச்சு அனுமதியளித்திருக்கிறது.

இதற்காக மொத்தம் 3 கோடி ரூபாய் மூலதனம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மோட்டார்கார்கள், ரேடியோக்கள், தையல் மிஷின்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார விசிறிகள், கார் பாட்டரிகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றின் உதிரி பாகங்களை ஒனறு சேர்க்கும் சாதனவகைகளுக்காகவே இத்தொகை அனுமதிக்கப்பட்டது.

பாலிஷ்கள், க்ஷவர பிளேடுகள், சூட்கேஸ்கள், ஜாம், சட்னி, மண்ணெண்ணை அடுப்புகள், மருந்து வகைகள், சொக்கலெட்டுகள், ரேயன் புடவைகள், பிளாஸ்டிக், சிமிந்தி, ஸ்கூட்டர்கள் ஆகியவை உற்பத்தி செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1 கோடி ரூபாய் தனியார் மூலதனத்துக்கு அனுமதியளிக்கவும் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும். 3 கோடி ரூபாயில் 60 லட்சம் ரூபாய் வெளி நாட்டு மூலதனமாகும். மிகுதி இலங்கை மூலதனம்.

## அரசாங்க மொழிக்கொள்கை அமுல்நடத்தப்படவில்லை

### இலாகாக்கள் பற்றி நிரந்தரக் காரியதரிசி புகார்

கொழும்பு, ஞாயிறு

"சில இலாகாக்கள் அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கையை அமுல் நடத்தாமலிருக்கின்றன" என்று நீதிமந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. பி. ஏ. டி' சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக இலாகாத் தலைவர்களுக்கு அவர் அனுப்பியுள்ள மகஜரில் மொழிக் கொள்கைபற்றிய மந்திரிசபையின் முடிவு, இலாகாக்களில் அமுல் செய்யப்பட வேண்டுமெனக் கூறியிருக்கிறுர்.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அல்லது கஷ்டங்கள் ஆகிய அம்சங்கள் பற்றிப் பொது மக்களோ அதிகாரிகளோ அல்லது சங்கங்களோ உத்தியோக மொழிக் கமிஷனருக்கு அறிவித்தால் இது பற்றிக் கவனிக்கப்படுமெனவும் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்திருக்கிறுர்.

அரசாங்க இலாகாக்களுக்கு விஜயம் செய்து மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதிலுள்ள கஷ்டங்களைப்பற்றி விசாரிக்குமாறும் மொழிக்கமிஷனருக்கு நீதிமந்திரி உத்தரவிட்டிருப்பதாய் மகஜரில் கூறப்பட்டிருக்கிறது.

## உள்ளூராட்சி ஆய்வு அதிகாரிக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி ஆய்வு அதிகாரியாகக் கடமையாற்றி வவனியாவுக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. வி. எஸ். சண்முகத்துக்கு யாழ்ப்பாணம் சனசமூகநிலைய சமாஜத்தினல் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

சுண்டிக்குளி பரியோவான் கல்லூரி மண்டபத்தில் கேட் முதலியார் திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் உட்பட பலரும் அவரது சேவையைப் பாராட்டிப்பேசினர்.

சமாஜக் காரியதரிசியினல் பாராட்டிதழ் ஒன்றும் படித்தளிக்கப்பட்டது.

## 'கோவாமீது போர் தொடுப்பதாக அர்த்தமல்ல'

### நேருவின் உரைக்கு மொரார்ஜி விளக்கம்

புதுடில்லி, அக். 22

"பாரதத்தின் சுதந்திரத்துக்கு

கோவாவினல் ஆபத்து ஏற்படுமானல் தான் கோவாவின் விடுதலைக்கு இந்தியா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும். கோவா விடுதலைக்கு கோவா மக்கள் அகிம்சை முறையைக்கையாள்வதே சிறந்தது" என்று இந்திய நிதிமந்திரி திரு.மொரார்ஜி தேசாய் இன்று புதுடில்லியில் நடைபெற்று இன்று முடிவடைந்த போர்ச்சுக்கீஷிய காலனி நாடுகளின் விடுதலை பற்றிய மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மகாநாடு நாளை பம்பாயில் நடைபெறும் கூட்டத்துடன் முடிவடைகிறது.

கோவா விடுதலைக்கு இந்திய ராணுவ நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை இந்தியா முற்றுகக் கைவிடவில்லையென்று பிரதமர் நேரு கூறியதை கோவாமீது இந்தியா படையெடுக்கப் போவதாகக் கருதுவது தவறுஎன்றும் திரு. மொரார்ஜி தேசாய் கூறினர்.

## நிதிமந்திரியின் சம்பளம், அலவன்ஸ்கள் என்னென்ன?

### எம். பி. யின் கேள்விக்கு நவம்பர் 10ல் பதிலளிக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

(1) நிதிமந்திரியின் மாதாந்தச் சம்பளம் என்ன? நிதிமந்திரி, பாதுகாப்பு - வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசி என்ற வகையில் அவர் மாதம் எவ்வளவு சம்பளம் பெறுகிறுர்?

(2) நிதிமந்திரி மதாமாதம் என்னென்ன அலவன்சுகள் பெறுகிறுர்?

(3) நிதிமந்திரியின் அந்தரங் காரியதரிசி என்ற முறையில் அவரது மனைவி பெறும் அலவன்ஸ் அல்லது சம்பளம்

(5ம் பக்கம் பார்க்க)

காரைநகர், ஞாயிறு

காரைநகர் இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இம்மாதம் 25ந் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. பாரிஸ்டர் டி. முத்துச்சாமிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறுர்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கிரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கிறீஸ்துராசா திருநாள்

யாழ்ப்பாணம் புதுறோட் கொய்யாத் தோட்டப் பதியில் கிறிஸ்துராசா ஆலயத்தில் முதல் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (23-10-61) திங்கட்கிழமை மாலை ஆரம்பமாகி (29-10-61) காலை திவ்விய பூசை முடிவில் திருச் சுருப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவுறும்.

யாழ்ப்பாணம் மேற்றிராசன பிரசங்கக் குருமார் சபைத் தலைவரான அதி வண. பிதா Z. N. குருஸ் O.M.I. சுவாமியார் அவர்கள் திங்கட்கிழமை மாலை திவ்விய பிரசங்கம் செய்வார்கள். கிறீஸ்துராசா பக்தர்கள் பெரும் திரளாய் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

L. J. அகுஸ்தின் O.M.I.
கட்டளைக் குரவர்

### தேவை

பதிவு செய்யப்பட்ட பெனிவிற் சொசைற்றியில் மனேஜராகக் கடமையாற்ற ஒருவர் தேவை. பிணைப்பணம் ரூபா 1000ம் கட்ட வேண்டும். வேதனம் 90—150 ம் கொமிஷன் 72—12 னும் கொடுக்கப்படும். நேர்மையும், நிர்வாகத் திறமையுமுள்ள ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். நிர்வாகக் காரியதரிசி, த, இந்தோ சிலோன் பெனிவிற் சொசைற்றி லிமிட்டெட், இல. 513, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# 'நாவலர்காட்டியநன்னெறியில் ஆரம்பித்த கல்விக்கழகம்'

## இந்துக்கல்லூரி தமிழ் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம் திங்கள்

இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் 10 மணியளவில் வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் வித்துவான் திரு. கே. கார்த்திகேயன் பி. ஏ. தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

காரியதரிசி திரு. மு கணபதிப்பிள்ளை வித்தியாசாலை நிலைபற்றி வாசித்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:-

"நாவலர் காட்டிய நன்னெறியிற் பண்பட்ட சைவப் பெருமக்களால் ஆரம்பித்து வைக்கப் பெற்ற இவ்வித்தியாசாலை இறைவன் திருவருளாலும், அரசாட்சியாரின் உதவியாலும், பெற்றோர் ஆசிரியரின் ஒத்துழைப்பாலும் சிறந்த பாடசாலைகளுள் ஒன்ருக விளங்குகிறது.

இன்றைய மாணவர்களே எதிர் காலத்தை உருவாக்கும் பொறுப்புடையோர். இது காரணமாக மாணவர்கள் நல்ல சூழ் நிலையில் வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கேற்ற வசதிகளை அளிப்பது கல்வி நிலையங்களின் தலையாய கடமையாகும். இந் நோக்கம் நிறைவேறக் கல்விமான்களும், பெற்ருேரும், ஆசிரியரும் ஒத்துழைத்து மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதில் ஊக்கமளித்து வருகின்றனர்.

பாலர் கீழ்ப் பிரிவு தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை 368 ஆண்களும் 322 பெண்களுமாக 690 மாணவர்கள் கல்வி பயில்கின்ருர்கள். இவர்களுக்கு 22 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகிருர்கள்.

பிரதி வெள்ளிக் கிழமை தோறும் இப் பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் நடேசப் பெருமானுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து விசேஷ பூசை, ஆராதனை நடத்தி வழிபாடு செய்து வருகின்ருர்கள். நால்வர் குருபூசை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை, ஆனி உத்தர பூசை இவைகளும் சிறப்பாக இங்கு நடைபெற்று வருகின்றன. பிரதி வருடமும் ஐப்பசிமாதக் கடைசி வெள்ளிக்கிழமையிலன்றுமாணவர்களும் மற்ருேரும் சிவ தீட்சை பெற்றுவருகின்ருர்கள்.

கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சமயபாடப் பரீட்சையில் இப் பாடசாலை மாணவர்கள் ஆரம்ப பிரிவு 1-ம் பகுதியில் 52 பேரும், ஆரம்ப பிரிவு 2-ம் பகுதியில் 33 பேரும் சித்தியடைந்துள்ளார்கள். இரு மாணவர்கள் விசேஷ சித்தியடைந்து பரிசில்களும் பெற்றுள்ளார்கள்."

இதன்பின் மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவின்பின், தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

# வர்த்தக அறிவுடையோரே பரீட்சையாளராக இருத்தல்வேண்டும்

## யாழ்ப்பாணத்தில் இலங்கை தொழில்நுட்பக் கமிஷன்விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரி விசாரணைக் கமிஷன் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிக்கும் மற்றும் சில இடங்களுக்கும் சென்று விசாரணை நடத்தினர் யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிக் குறைபாடுகளை விசாரிக்கும்படி அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றமும் தொழில்நுட்பக் கல்லூரிமாணவர்களும் இக்கமிஷனைக் கேட்டிருந்தன. இதன்படி செவ்வாய்க்கிழமை கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் வந்து விசாரணை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இக்கமிஷன் வெள்ளிக்கிழமை இங்கு விஜயம் செய்தது.

திரு. ஜி. டி. எஸ். குணசிங்காவைத் தலைவராகக் கொண்ட இக்கமிஷனில் ஜனுப் ஏ. எல். மாக்கான் மரைக்கார் திரு. டி. என். இ. டி'மெல் திரு. எஸ். ஞானலிங்கம், திரு. ஆர். இராசசிங்கா, பி. பெர்னண்டோ ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வாடிவீட்டில் இக்கமிஷனை அகில இலங்கை வர்த்தக மலைமன்றம் சந்தித்து ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர். அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

ஆசிரிய கலாசாலைகளில் தமிழ் மாணவர்களுக்கும் விசேட வர்த்தகப் பயிற்சி வகுப்பு நடாத்த வேண்டும்.

சிரேஷ்ட பாடசாலை ஒவ்வொன்றிலும் குறைந்தது ஓர் வர்த்தக ஆசிரியரை நியமித்தல். அத்துடன் ஒவ்வொம் சிரேஷ்ட பாடசாலைகளிலுரு கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில் கல்வி போதித்தல்

(5ம்பக்கம் பார்க்க)

## திருமணம்

மணமகன்: செல்வன் வி. மார்க்கண்டு
(தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.)

மணமகள்: செல்வி த. கணேஸ்வரி

காலம்: பிலவஞு ஐப்பசிமீ 11உ வெள்ளி (28-10-61)

முகூர்த்தம்: வைகறை 3-23 தொடக்கம் 5-14 வரையும்.

இடம்: நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

உபசரணை: மணமகன் இல்லத்தில்
28 சனி, 29 ஞாயிறு திகதிகளில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை மகிழ்வுடன் எதிர்பார்க்கும்

த. தம்புவும் பாரியாரும்
(மணமகள் இல்லத்தார்)

த. ஆறுப்பிள்ளையும் பாரியாரும்
வி. பசுபதியும் பாரியாரும்
(மணமகன் இல்லத்தார்)

நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

பரதநாட்டிய சங்கீதக்கலை மன்ற
நிதிக்காக

## அரிய பரதநாட்டியக் கச்சேரி

நாட்டிய கலாகேசரி
வழுவூர் ஸ்ரீ இரமையாபிள்ளை
அவர்களின் தலைமையில்
யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில்
25-10-61 புதன்கிழமை மாலை 6-30க்கு நடைபெறும்.

நாட்டியக் கலாகேசரியின் இலங்கைப் பிரதம சிஷ்யை

## குமாரி திரிபுரசுந்தரி குமாரசாமி அவர்களின்

பரதநாட்டியக் கச்சேரி
26-10-61 வியாழக்கிழமை மாலை 6-30க்கு
சேர் கந்தையா வைத்தியநாதன்
தலைமையில் நடைபெறும்.

டிக்கட் விபரம்: ரூ. 10, 5, 3. மாணவர்களுக்கு ரூ. 2.

(டிக்கட்டுகள் இரு தினங்களுக்கும் பெறுமதியாகும்.)

டிக்கட் கிடைக்குமிடம்: யாழ் உலோக தொழிற்சாலை, 252, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 260. 50, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். போன்: 7050. யாழ்ப்பாணம் நகர மண்டப வாயிலில்.


# தாயும் மகளும் நவநாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

## பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, சுணமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:
சீ. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

# அணு யுத்தம் மூண்டால் நாங்களே வெல்வோம்!

## ரஷ்யாவுக்கு யு. எஸ். உதவிமந்திரி எச்சரிக்கை

ஹொட்ஸ்பிரிங்ஸ், அக். 21

"சோவியத் ரஷ்யா அணுக்குண்டை வைத்துக் கொண்டு நாசகரமான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. அமெரிக்காவின் கையிருப்பில் லட்சக்கணக்கான அணுக்குண்டுகள் இருக்கின்றன. மகாயுத்தம் மூண்டால் அமெரிக்கா வெற்றிபெறும்" என யு. எஸ். உதவி பாதுகாப்பு மந்திரி திரு. ரோஸ்வெல் கில் பெட்ரிக் எச்சரித்திருக்கிருர்.

"ரஷ்யா எதிர்பாராதவிதமாய்த் திடீரெனத்தாக்கிநாசம் விளைவித்தாலும் கூட, அமெரிக்காவின் தாக்கும் சக்தி அதைவிட அதிகமாகவே இருக்கும். எனவே பெரிய அளவான அணுத்தாக்குதலை ரஷ்யர்கள் நடத்துவார்களென நாங்கள் கருதவில்லை.

ரஷ்ய அணுக்குண்டுகளைவிட அமெரிக்கா, மிகவும்சக்தியுள்ள அணுக்குண்டுகளைத் தயாரிக்க முடியும்" என்றும் அவர் கூறினர்.



இந்திய அரசாங்கம் சமீபத்தில் டில்லியில் நிறுவிய 'என்ஜினியரிங், தொழில் நுட்பக் கல்லூரியை விஞ்ஞான-கலாச்சார மந்திரி பேராசிரியர் ஹுமாயூன் கபீர் திறந்து வைத்தார் இக் கல்லூரிக்கு 5 லட்சம் பவுன் பிரிட்டிஷ் உதவி கிடைத்தது. திறப்பு விழா வைபவத்தின்போது பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சர் பால் கோர்-பூத் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிருர். அருகே. பேராசிரியர்கள்: கபீர், தக்கர் ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

## ககாரின் நேருவின் அதிதி

புதுடில்லி, அக். 22

சோவியத் வானவெளி வீரர் யூரி ககாரின் இம்மாதம் 26-ம் தேதி புதுடில்லி வருகிருர். பிரதமமந்திரி நேருவின் அதிதியாக அவர் தங்குவார். டில்லி மக்கள் அவருக்குப் பொதுவரவேற்பு ஒன்றை அளிப்பார்கள்.

# அமெரிக்காவின் புதிய ராக்கெட்

## 2000மைல் உயரே சஞ்சரிக்கிறது

வாஷிங்டன், அக். 22

அமெரிக்கா பரீட்சார்த்த ராக்கெட் ஒன்றை வானவெளிக்கனுப்பியது. வானத்தில் 2000 மைல் உயரே. இது பூப் பிரதட்சணம் செய்யுமென்றும், பூமிக்கு ரேடியோ அலைகளை அது அனுப்புமென்றும் கூறப்பட்டது. பல லட்சக்கணக்கான செப்பு ஊசிகள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உலக முழுதுமுள்ள விஞ்ஞானிகள் இந்த ராக்கெட்டின் நடமாட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

## லண்டனில் 500 ஆர்ப்பாட்டக்கார் கைது

லண்டன், அக். 22

லண்டனிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயத்திற்கு வெளியே 500 ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலீசார் கைது செய்தனர். சோவியத்தின் உத்தேச அணுக்குண்டு வீச்சு பற்றி இவர்கள் ஆட்சேபித்தனர்.

## அரசியலை விடமுடியாது

### முஸ்லிம்லீக் தலைவர் அறிவிப்பு

சென்னை, அக் 20

தேசிய அடிப்படையில் இயங்கும் முஸ்லிம் லீக் அரசியலை விட்டு ஒதுங்கிவிடமுடியாது என்று அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் ஜனப் இஸ்மாயில் இன்று தெரிவித்தார்.

அன்றாட வாழ்க்கையுடன் அரசியல் சம்பந்தப்பட்டுள்ளது. மதம், பொருளாதாரம், சமூகம் ஆகிய நலனுக்காக உழைக்கும் முஸ்லிம்லீக் அரசியலை விட்டு விடுவது சாத்தியமல்ல என்று ஜனப் இஸ்மாயில் கூறினர்.

அரசியல் திட்டத்துக்கிணங்கவே முஸ்லிம்லீக் கடமை புரிகிறது. அரசியல் சட்டத்துக்கு விரோதமாகவல்ல என்றும் ஜனப் இஸ்மாயில் தெரிவித்தார்.

## திரு. வெங்கட்ராமன்

நியூயோர்க், அக். 22

ஐ. நா. நிர்வாக டிரிபியூனலுக்கு இந்தியாவைச் சேர்ந்த திரு. வெங்கட்ராமன் அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்.

## ராதா கிருஷ்ணனுக்கு சமாதானப்பரிசு

பிராங்க்பர்ட், அக். 22

இந்திய உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு இங்கு சமாதானப்பரிசு வழங்கப்படவிருக்கிறது. இதற்கு முன் இப்பரிசு முன்னள் மேற்கு ஜெர்மன் ஜனதிபதிக்கும், திரு. அல்பர்ட் சுவெட்ஸருக்கும் இது வழங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று பிராங்க்பர்ட் வந்து சேர்ந்தார்.

## மேனன் டில்லி திரும்பினர்

புதுடில்லி, அக். 22

ஐ. நா. வில் இந்தியத்தூது கோஷ்டிக்குத் தலைமைவகித்த பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இன்று காலை புதுடில்லி திரும்பினர்.

## ஆசிரியர் மாணவர் சுற்றுப் பயணம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

தொளஸ்பாகையைச் சேர்ந்த பட்டித்தலாவை அரசினர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கோஷ்டியொன்று சரித்திர சம்பந்தமான இடங்களைப் பார்ப்பதற்கான சுற்றுப் பிரயாணத்தைத் தொடங்கியுள்ளனர். இம்மாதம் 20-ம் திகதி சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்து, கண்டி, மாதளை. மிகிந்தலை, அனுராதபுரம், சிலாபம் முதலான இடங்களுக்குச் சென்று மூன்று தினங்களில் திரும்புவதற்கான ஒழுங்குகள் செய்துள்ளனர்.

# போர்த்துக்கல் காலனி பற்றி ஐ. நா. நடவடிக்கை

## உடன்எடுக்குமாறு திரு.சென் வற்புறுத்து

புதுடில்லி, அக். 22

போர்த்துக்கீசிய காலனிகளின் நிலைமைபற்றி ஆராய்வதற்காக இங்கு கூடியுள்ள மகாநாட்டில் இந்திய சட்ட மந்திரி திரு. ஏ. கே. ஸென் பேசினர். போர்த்துக்கீசிய காலனிகளிலுள்ள மக்களின் உரிமைகளைக் காக்க ஐ. நா. நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென அவர் அப்போது கூறினர். அங்கோலாவில் நடைபெறும் சம்பவங்கள் சர்வதேச அமைதிக்குப்பங்கம் விளைவிக்கக்கூடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஆகாகான்

பம்பாய், அக். 22

பம்பாயில் 6 தினங்கள் தங்கியிருந்த பின் ஆகாகான் இன்று ரோமாபுரிக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

## இந்தியாவில் 15 லட்சம் குஷ்ட ரோகிகள்!

புதுடில்லி, அக். 22

இந்தியாவில் 15 லட்சம் குஷ்ட ரோகிகள் இருப்பதாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

# "இராணுவ நடவடிக்கை கைவிடப்படவில்லை"

## கோவா விடுதலைபற்றி நேரு

புதுடில்லி, அக். 20

"கோவா விடுதலைக்கு இராணுவ நடவடிக்கை எடுக்கும் சாத்தியக் கூறுகளைப் பாரதம் முற்ருகக் கைவிட்டுவிடவில்லை. ஆனல் சமாதான முறையில் சகல நடவடிக்கைகளையும் முயற்சி செய்வதுதான் பாரதத்தின் கொள்கை" என்று பாரதப் பிரதமர் நேரு இன்று புதுடில்லியில் கூறினர்.

போர்ச்சுக்கல் காலனி ஆதிக்கம் பற்றிய மகாநாட்டை புதுதில்லியில் இன்று ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே பிரதமர் நேரு மேற்கண்டவாறு கூறினர். ஆபிரிக்கா பற்றிய பாரத சபையினுல் கூட்டப்பட்ட இந்த மகாநாட்டில் இன்னும் காலனி ஆதிக்கத்திலுள்ள ஆபிரிக்க தேசிய சக்திகளை வலுப்படுத்தி ஆபிரிக்க நாடுகளின் விடுதலைக்கு திட்டம் வகுப்பதுதான் இந்த மகாநாட்டின் நோக்கமாகும்.

இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்து நேரு பேசுகையில் காலனி ஆதிக்கத்தின் வன்மையான போக்கை இன்னும் போர்ச்சுக்கல் உணரவில்லையென்று கூறினர்.

காலனி ஆதிக்க அரசுகள் தங்கள் நிலைமையை ஓரளவு புரிந்துகொண்டு அதற்கேற்றபடி நடந்துகொண்டபோதிலும் வல்லரசுக் குமுறல்கள் அந்த நிலைமையைத் தடைப்படுத்திவிட்டனவென்ருர்.



ஐ. நாவிலுள்ள அமெரிக்க தூதுகோஷ்டித் தலைவர் திரு. அட்லாய் ஸ்டீவன்சன், நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. அமெரிக்கத் தூதுகோஷ்டிக் காரியாலயத்திற்கு முன் தனது உதவியாளர்களுடன் காணப்படுகிருர். அமெரிக்கக் காரியாலயம் 12 மாடிகளையும், 15 மாடிகள் கொண்ட கோபுரத்தையு உடையது.

## மணி வாக்கு

"பிறர் கூறுவதற்குச் செவி சாய்க்கக் கற்றுக் கொள். தவருகப் பேசுவோரிடமிருந்து கூட அறிவு பெறுவாய்."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஐப்பசி மீ 7 உ (23-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## நியமன மெம்பர்

குடியேற்ற கட்டுப்பாட்டுச் சட்ட திருத்த மசோதா, சென்ற வெள்ளிக்கிழமையன்று இரண்டாம் முறையாக பார்லிமெண்டில் விவாதத்துக்கு வந்தபோது நியமன மெம்பரான திரு. எஸ். தொண்டமான், அதை எதிர்த்து வாக்களித்தார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு மெம்பர், அரசாங்கத்துக்கு மாருக வாக்குச் செய்தது நீண்டகால சம்பிரதாயத்தை மீறியதாகுமென்று ஓர் ஆங்கில சகவர்த்தமானியின் பார்லிமெண்ட் நிருபர் எழுதுகின்றார். திரு. தொண்டமான் அம்மசோதாவை எதிர்த்துப் பேசியதுமட்டுமல்லாமல், அதை எதிர்த்து வாக்களித்தது பழைய வழக்கத்தை மீறியதாகுமென்று அவர்மீது குற்றம் சாட்டுகின்றார். அந்த நிருபர் கூறுவது போல் எல்லா விஷயங்களிலும், அரசாங்கத்துக்கு தலையாட்டி பொம்மையாகவே நியமன மெம்பர்கள் இருக்கவேண்டுமென்பதாயின், அந்த நியமன ஸ்தானங்களுக்கு அர்த்தமேயில்லை.

தேர்தல் மூலம் நாட்டிலுள்ள ஏதாவது அம்சத்தினருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்காமற் போயின் அந்தக் குறையை நிறை செய்ய, ஆறு மெம்பர்கள்வரை ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்க, தற்போதைய சோல்பரி அரசியல் சட்டம் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரமளிக்கிறது. சாதாரணமாக பிரதம மந்திரி கூறும் யோசனையின்மீதே கவர்னர் ஜெனரல் அந்த மெம்பர்களை நியமித்துவருகின்ருர். எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்தையே நியமன மெம்பர் ஆதரிக்க வேண்டுமென்ற நிபந்தனை எதுவும் அரசியல் சட்டத்திலில்லை. அவ்வித நிபந்தனைமீது இந்த 6 ஸ்தானங்களுக்கும் மெம்பர்களை நியமிப்பதாயின், இந்த ஸ்தானங்களை உடனடியாக நீக்கிவிடுவதே ஜனநாயக தர்மமாகும். ஆனல் நாமறிந்தவரை அவ்வித நிபந்தனை எதுவும் கேட்கப்படுவதாகத் தெரியவில்லை. இம்மாதிரியான நிபந்தனையை விதிப்பதோ, அல்லது அதற்கு உட்படுவதோ மெம்பர்களின் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் பாதிப்பதாகும்.

இந்தியா அடிமைப்பட்டிருக்கையில், டில்லி அசம்பிளி சபைக்கு தொழிலாளர் தலைவர் திரு. என். எம். ஜோஷி என்பவர் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டிருந்தார். திரு. ஜோஷி, தொழிலாளர் விஷயத்தில் மட்டுமன்றி வேறு விஷயங்களிலும் அரசாங்கத்துக்கு மாருகவே அநேகமாக வாக்களித்து வந்தது குறிப்பிடத்தக்கது. சோல்பரி அரசியல் திட்டத்தின்படி, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு, 100 பேரடங்கிய சபையில் சுமார் 14 பிரதிநிதிகள் இருக்க வேண்டும். 150 பேருக்கு மேலுள்ள இப்போதைய சபையில் குறைந்தது 20 பேருக்கு மேலாக இருக்க வேண்டும். ஆனல் அம்மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால், தர்தல் மூலம் ஒரு பிரதிநிதி கூட வர முடியவில்லை. இதுகாரணமாக அச் சமூகத்தில் ஒரேயொருவரை மட்டுமே பிரதமர் சபைக்கு நியமித்தார். அந்த ஒருவர்கூட, தமது சமூகத்தினரைப் பாதிக்கும் சட்ட திட்டங்களில் தம் இஷ்டப்படி வாக்களிக்கக் கூடாதென்ருல், இது வெறும் கேலிக் கூத்தாகும். சுயமரியாதையுள்ள எவரும் அவ்வித நிபந்தனைக்குக் கட்டுப்படமாட்டார்கள்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் எண்ணிக்கையையும் அச் சமூகத்தினர் வகிக்கும் முக்கிய நிலைமையையும் பார்ப்பின், இந்த ஒரே ஒரு நியமன ஸ்தானம் போதவே போதாது. இது நமது அரசியலிலுள்ள பெரிய குறை. இதை உணர்ந்தே புதுடில்லியில் 1954-ல் நடந்த பேச்சுகளின் பயனுக, இந்திய வம்சாவழியினருக்கு 4 ஸ்தானங்களை தனித் தொகுதி தேர்தல் மூலம் ஒதுக்குவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டு, பின்னர் அது சட்டமாகவும் செய்யப்பட்டது. ஆனல் அதுவும் எக்காரணம் பற்றியோ பறிக்கப்பட்டு விட்டது. இன்று இலங்கையில் ஜனநாயகம் வெற்றிபெற முடியாமல் இருப்பதற்கு, சிறுபான்மையோருக்கு சபையில் நியாயமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாததே காரணமாகும். இந்தக் குறை எவ்வளவு சீக்கிரத்தில் நீக்கப்படுகிறதோ அவ்வளவும் நாட்டில் அரசியல் அமைதி ஏற்பட்டு, ஜனநாயகமும் வெற்றிப் பாதையில் செல்ல முடியும்.

# தென் கிழக்கு ஆசியாவில் வளர்ந்துவரும் மலாயா வல்லரசு

டோக்கியோ, டோயு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஷீ ஷென் பிங் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ள மலாயா, "தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவன"த்தில் சேர எப்போதும் மறுத்துவந்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தாய்லாந்து, ஆகிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின்கீழ் 1955-ல் அமைக்கப்பட்ட "தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனம்" (சீட்டோ) தனது நிலை கடினமாகியுள்ளதை உணர்கிறது. "தென் கிழக்கு ஆசிய கூட்டணி நாடுகள்" (அஸாஸ்) ஒன்றை அமைக்க தற்போது மலாயா மிகவும் விரும்புகிறது. இந்த நிறுவனத்தில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுடன் மலாயா சேரும். ஒரு கூட்டு "பொருளாதார, கலாச்சார நிறுவனம்" அமைக்க கடந்த ஜூன் மாதத்தில் இம் மூன்று நாடுகளின் தலைவர்களும் பாங்காக்கில் கூடி ஒரு திட்டத்தை வகுத்தனர். மலாயாபிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான துங்கு அப்துல்ரஹ்மான் புத்ரா கடந்த ஆகஸ்டில் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர்களுடன் இரண்டாவது மகாநாடு ஒன்றை நடத்தினர். பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்காக "அஸாவில்" சேர்ந்து ஒன்றுபட்டு உழைக்க வருமாறு தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ள எல்லா நாடுகளையும் அழைத்து அவர்கள் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். இதன் உண்மையான நோக்கம் தென் கிழக்கு ஆசியாவில் ஒரு பொதுச் சந்தையை அமைப்பதுவே. இதுவரை மற்ற நாடுகள் இதற்கு முன்வரவில்லை. நடுநிலைமை நாடாகிய பர்மா அண்மையில்தான் கம்யூனிஸ்டு சீனவுடன் ஓர் எல்லை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. மேலும், அமெரிக்க டாலர் 9.4 கோடிக்குச் சமமான தொகையை பீக்கிங்கிடமிருந்து பர்மா கடன் பெற்றது. தனது பிரமாண்ட வடக்கு அண்டை நாட்டின் பலத்த நெருக்கடியின் காரணமாக அஸாவில் பங்குகொள்வது ரங்கூன் சர்க்காருக்கு கடினமான காரியமாமாகும். இந்தோனேஷியா மத, இன முறையில் மலாயாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். ஆனல், அஸாவை எளிதாக ஓர் அரசியல் கூட்டணியாக மாற்ற முடியும். அஸா ஓர் அரசியல் கூட்டணியாவது அனுபவ சாத்தியமற்றது என நாங்கள் நம்புகிருேம் என்று அதிபர் சுகர்ணே கூறியுள்ளார். தென் வியட்நாமின் கன்பூசிய மரபு, முஸ்லிம் மலாயாவை அந்நாடு பின்பற்ற கடினமாக்கியுள்ளது. மேலும், வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்னும் 1954-ம் ஆண்டு ஜினிவா உடன்படிக்கைக்கு வியட்நாம் கட்டுப்பட்டுள்ளது.

### 'மலேசியா சமஷ்டி'

கோலாம்பூர அரசாங்கத்தின் மற்றெரு திட்டம் "மலேசியா சமஷ்டி". இந்த சமஷ்டி உருவானல், தென்கிழக்கு ஆசியாவில் இந்தத்தேசம் ஒருபெரும் வல்லரசாக இருக்கும், உத்தேச "மலேசியா சமஷ்டி"யின் அடிப்படையாக அமைந்துள்ள மலாயா தென்கிழக்கு ஆசியாவில் பொருளாதார, அரசியல் முறையில் மிகவும் ஸ்திரமான நாடாகும்.

ரப்பரையும், ஈயத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ள மலாயாவின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க முறையில் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது மலாயா மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி, கடந்த ஆண்டு இறுதியில் அரசாங்க பட்ஜெட்டில் (சுமார் அமெரிக்க டாலர் 5.4 கோடி) உபரி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இறக்குமதியை விட ஏற்றுமதி சுமார் டாலர் 25.7 கோடி அதிகமாகும். அந்நிய நாணயக் செலாவணி ஒதுக்கப்பட்டது சுமார் 75 கோடியாகும். உத்தேச மலேசியா சமஷ்டியில் மலாயா கூட்டரசும், சிங்கப்பூரும், சரவாக்கும், புருணையும், வடபோர்னியோவும் அடங்கியுள்ளன. உத்தேச மலேசியாவின் மொத்தப் பரப்பளவு சுமார் 13 லட்சம் சதுரமைல்; மேலும் உலகில் எண்ணெய் வளமிக்க நாடுகளில் ஒன்ருக இருக்கும். உலகின் ஈயத்தில் மூன்றில் ஒருபகுதியும், உலகின் ரப்பரில் நான்கில் ஒரு பகுதியும் அந்நாடு பெற்றிருக்கும்.

### சரவாக்

பிரிட்டிஷ் காலனியான சரவாக், 1841ல் கடற் கொள்ளையரை எதிர்த்துப் போராட உதவியதற்கு புருணை சுல்தானல் சர்ஜேம்ஸ் புருக்கிற்கு வெகுமதியாக வழங்கப்பட்டது. 1945-ல் உள்நாட்டில் குடியிருந்த சீனர்களுடைய உடன்பாட்டின் பேரில் புருக் குடும்பத்தினர் தங்கள் சொத்தை பிரிட்டிஷ் அரச வம்சத்திடம் ஒப்படைத்தனர். சுமார் 50,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட சரவாக்கின் கடற்கரையின் நீளம் 450 மைல். ரப்பர் வளம் நிறைந்த சரவாக்கில் புருணையிலிருந்து வரும் பெட்ரோலியத்தை சுத்திகரிக்கப்படுகிறது. 1881-ல் பிரிட்டிஷ் வடபோர்னியோ கம்பெனியால் நிர்வகிக்கப்பட்ட வடபோர்னியோ 1946-ல் கிரவுன் காலனியாக மாறியது. மொத்தம் 29,500 சதுரமைல் பரப்பளவு கொண்ட வடபோர்னியோவின் மக்கள் தொகை 4,19,000; அங்கு ரப்பரும், மரமும், அரிசியும் முக்கிய செல்வங்களாகும்.

1888 முதல் பிரிட்டிஷ பாதுகாப்பின் கீழ் உள்ள புருணை ஒரு சமஸ்தானமாகும். 15 வது நூற்ருண்டில் அது போர்னியோ சாம்ராஜ்யமாக இருந்தது. அதன் வாங் மன்னர் ஒரு சீனர். இந்த ராஜ்யத்தை ஜாவாவில் இருந்த மஜபாகிட் சாம்ராஜ்யம் வெற்றி கொண்டது.பின்னர் போர்னியோ தீவு மக்கள் முஸ்லிம்களாக மாறினர். மொத்த 2,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட புருணையின் மக்கள் தொகை 80,000. உலகில் அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் 12வது பெரிய நாடு புருணை. இதன் வருடாந்த வருமானம் டாலர் 5 கோடி. புருணை சமஸ்தானதிபதியாகிய சர் ஓமார் அலி ஷைபுதீன் வாஸ்தாவில் கைரி வாதின் கூட்டரசுடன் நேரடியாக இணைவதற்கே விரும்புகிருர் என்று தெரிய வருகிறது. மலாயாவின் ஒன்பது சமஸ்தானங்களைச் சேர்ந்த சுல்தான்களிடையே தமக்கு நல்லநிலை கிடைக்கும் என்று சர் ஓமார் உணருகிருர். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மலாயா சமஸ்தானதிபதிகள் தங்களுக்குள் ஒரு "பேரரசரை" தேர்ந்தெடுக்கின்றனர்.

### மலாய்க்காரர் மெஜாரிட்டி

போர்னியோ பிரதேசங்களில் மொத்த ஜனத்தொகையில் சீனர்கள் 25 சதவிகிதமே. இதனல் சிங்கையின் 15 லட்சம் மக்களில் 80 சதவிகிதத்தினர் சீனர்களாகஇருந்த போதிலும் மலேசியா சமஷ்டியில் மலாய்க்காரர்களின் மெஜாரிட்டி உறுதி செய்யப்படும்.எனவே, சீனரின் செல்வாக்கு குறையும். சிங்கப்பூரும், கூட்டரசும் 1963க்குள் இணைந்துவிடும் என்று சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான்யூ ஆருடம் கூறியுள்ளார். கோலாலம்பூரில் மலாயா பிரதமரைச் சந்தித்துப் பேசிய பிறகு வெளியிட்ட அறிக்கை இணைப்பு குறித்து உடன்பாடு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளது. மலாயாவின் "அகில மலாயா பொறுப்புக்களான பாதுகாப்பு, வெளிவிவகாரம் பந்தோபஸ்து" பற்றியும், தொழிலாளர், கல்வித்துறைகளில் சுயாட்சி பெற்றிருக்க சிங்கப்பூர் விரும்புவது பற்றியும், இருதரப்பினரும் பரிசீலித்ததாக கூட்டறிக்கை கூறியது. "இந்த ஆலோசனைகளை இரு பிரதமர்களும் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டனர்" என்று அந்த கூட்டறிக்கை மேலும் தெரிவித்தது.

---

## கிரிக்கெட் டெஸ்ட்

லாகூர், அக். 22

எம். ஸி. ஸி. கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் தன் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்திற்கு 387 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

## ஐயாறன் எழுதுவது

ஆண்கள் சார்பாக படித்த பெண்களிடம் நீதியரசர் டாக்டர் தம்பையா மன்ருடி சில நல்ல யோசனைகள் கூறினர். யாழ்ப்பாண இந்துப் பெண்கள் கல்லூரி எச். எஸ். ஸி. மாணவிகள் சங்க ஆண்டு விழாவில் டாக்டர் பேசிய பேச்சு என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. நீங்களும் கொஞ்சம் கேட்கிறீர்களா?

"சிலர் கருதுவது போல் ஆண்கள் அவ்வளவு கெட்ட மிருகங்களல்லர். தாய்க்குப் பின் தாரம் என்பர். தாய் பக்கமாக சாய்ந்திருந்த ஆண்கள் விவாகமானதும் தங்கள் மனைவியின்பூரண ஆதரவையும் அன்பையும் எதிர்பார்க்கிருர்கள். விவாகமானதும், மனைவி தன் தாயின் ஆதிக்கத்தைவிட்டு, தன் புருஷன் மீது பூரண அன்பைக் காட்டவேண்டும். அதையே புருஷன் ஆவலுடன் எதிர்பார்க்கிருன். மாமியார் காரணமாக பல விவாகங்கள் ரத்து செய்யப்படுவதை நான் அறிவேன். விவாகமானதும் புதுத் தம்பதிகள் அன்புடன் ஒத்துவாழ வேண்டும். பெண்ணின் தாயும் இதை உணர்ந்து சற்றே பாசங்களை விட்டு ஒதுங்கி இருப்பது தங்கள் அருமைப் பெண்ணின் மகிழ்ச்சியான விவாக வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும்" என்ருர். சரிதானே பெண்ணைப் பெற்ற தாய்மார்களே நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

* * *

படித்த பெண்கள் இனி, அரசாங்க உத்யோகத்தர்கள் டாக்டர்கள் முதலியவர்களையே விவாகம் செய்ய வேண்டும் என்று விரும்பாமல், கமக்காரர்களை விவாகம் செய்துகொள்ளவும் துணிய வேண்டும் என்கிருர் நீதிஅரசர்.

முன்காலத்தில் லண்டன் மெட்ரிக் பாஸ் செய்தால் போதும். ஏதாவது நல்ல வேலை நிச்சயம் கிடைக்கும். பி. ஏ. பட்டம் பெற்றுவிட்டால் நீ, நான் என்றுபோட்டி போட்டுக் கொண்டு பெண்களைக் கொடுக்க சீதனத்துடன் போட்டி போட்டுக் கொண்டு முன்வருவர்.

ஆனல் இப்போது இங்கு பி. ஏ. பட்டதாரிகளில் ஆயிரம் பேர் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். போகப் போக நிலைமை மோசமாகும். ஆசிரியர் வேலையும் கிடைப்பது கடினம். ஆகவே படித்த பெண்கள் இனி கமக்காரரையும் கல்யாணம் கட்ட முன்வர வேண்டும் என்ருர்.

இதைப்பற்றி ஒரு தாயை விசாரித்தேன். படித்த பெண்கள் கமக்காரரை மணக்க விரும்பமாட்டார்கள் என்ருர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றையோர்தொழுதுண்டு பின் செல்பவரென்ற பொய்யா மொழியைக் கூறியும் அந்தத் தாய் மனம் மாறவில்லை.

ஒருவேளை பட்டம் பெற்று இங்கிலீஷ் பேசும் கமக்காரரை படித்த பெண்கள் மணக்க முன்வரக்கூடும்! என் நண்பர் ஒருவர் படித்து பட்டம் பெற்றவர். தன் உத்தியோகத்தை உதறித் தள்ளி, கோழிப்பண்ணை வைத்து நடத்தி பல மடங்கு அதிக பணம் சம்பாதிக்கிருர். அவரது படித்த மனைவியும் அவரும் அழகாகக் குடித்தனம் செய்கிருர்கள். மதிப்புக்கு ஒரு குறையுமில்லை.

* * *

சிறு கைத்தொழில்களில் பெண்கள் பயிற்சிபெறவேண்டுமென்று வற்புறுத்தினர் நீதி அரசர். அரசாங்கம் நெசவுமில் வைத்து பருத்திப்புடவை, வேட்டி இவற்றை மலிவாகக் கொடுக்குமாதலால் பருத்தித் துணிகளை இனி நெசவு செய்வது லாபகரமாக இராதென்றும் பட்டுப்புடவைகளை நெசவு செய்ய வேண்டுமென்ருர்.

(5ம் பக்கம் பார்க்க)

# "எனது காலிலும் கையிலும் சூடு விழுந்தது"

## இலட்சுமி தோட்ட விசாரணையில் மெண்டிஸ் சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

**"நான்குபேர் நரகத்தில் விழுந்துவிட்டார்கள். அவர்களுடன் சேராதீர்கள். என்னுடன் வர விரும்பியவர்கள் வாருங்கள். இந்த நால்வருடன் சேரவிரும்பியவர்கள் அவர்களுடன் சேர்ந்துவிடுங்கள்" என்று தோட்டத்துரை ஹார்லி கூறியதாக இலட்சுமித்தோட்ட விசாரணையில் சாட்சியமளித்த மெண்டிஸ் என்பவர் தெரிவித்தார்.**

இலட்சுமித்தோட்டவிசாரணை நேற்று மீண்டும் விசாரணை செய்யப்பட்ட போது பி. டபிள்யு. மெண்டிஸ் என்பவர் சாட்சியமளித்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான திரு. எம். திருச்செல்வம் முதலில் விசாரணை செய்தார். மெண்டிஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் இலட்சுமித் தோட்டத்தில் 1957-ம் ஆண்டு சேர்ந்தேன். நான் சேர்ந்த சமயத்தில் அங்கு தோட்டத்தொழிற் சங்கமொன்றும் இருக்கவில்லை. எனக்கு இதற்கான காரணத்தை அறிய முடியவில்லை. அப்பொழுது ஹார்லி சுப்பிரின்டனகக் கடமையாற்றி வந்தார். சுப்பிரின்டனல் தொழிலாளர்களுக்கு கஷ்டமிருப்பதாக அறிந்தேன். வெம்பிளி தோட்டத்தில் வேலைபார்த்தபோது நான் காங்கிரஸில் அங்கத்தவனாக இருந்தேன். இலட்சுமித் தோட்டத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்டத்திலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டதாக அறிந்தேன்.

1959-ம் வருடம் அக்டோபர் மாதம் காவற்காரரைச் சுடுவதற்கு முன்னராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் பலர் அங்கத்தவர்களாகச் சேர்ந்தார்கள். நானும் சேர்ந்திருந்தேன்.

நாம் காலையில் பிரட்டுக்களத்துக்குப் போனபின்னரே வேலைக்குப் போவது வழக்கம். 1959 - ம் ஆண்டு அக்டோபர் 20-ம் திகதி காலை சுமார் 10-30-க்கு திரு. ஹார்லி நாம் வேலைசெய்துகொண்டிருந்த இடத்துக்கு வந்து எம்மைத் தம்முடன் தோட்ட பங்களாவுக்கு வருமாறு கேட்டார். என்னுடன் அங்கிருந்த மாரியப்பன், சின்னத்தம்பி, சின்னப்பன் ஆகிய மூவரும் அங்கு அப்பொழுது வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஒருவரும் பங்களாவுக்குச் செல்லவில்லை. எங்களைத் தாக்கிவிடுவார்கள் என்ற காரணத்தினுல் தான் நாம் செல்லவில்லை. நாம் நாவலப்பிட்டியாவிலுள்ள பகுதி காங்கிரஸ் காரியாலயத்துக்கே சென்ளேம். அங்கு நாம் நடந்தவற்றைக் கூறினேம். அவர்கள் எம்மை வேலைக்குச் செல்லுமாறு கூறினர்கள்.

நாம் தோட்டத்துக்குச் சென்றபோது ஹார்லி எங்கள் நால்வரையும் ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்குமாறு கூறினர். அப்பொழுது அங்கு 10 காவற்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர் எம்மை ஒதுங்கி நிற்குமாறு கூறிவிட்டு, 'இந்த நால்வரும் நரகக் குழியில் விழுந்துவிட்டார்கள். இவர்களுடன் சேராதீர்கள். இவர்களுடன் சேர விரும்புபவர்கள் சேருங்கள். என்னுடன் சேரவிரும்புபவர்கள் என் பக்கத்துக்கு வாருங்கள்' என்றுர். ஒருவரும் தமது இடத்தைவிட்டு நகரவேயில்லை. 'எனது சொல்லைக் கேட்காவிட்டால் நான் தோட்டத்தையேமூடிவிடுவேன்என்றும்அவர் கூறினர். எம்மை வேலையிலிருந்து நீக்கியதற்கு அவர் காரணமொன்றும் தெரிவிக்கவில்லை. இதன்பின்னர் நாம் நாவலப்பிட்டி காங்கிரஸ் கந்தோருக்குச் சென்ளேம். அவர்கள் சுப்பிரின்டனுக்கு இதுசம்பந்தமாக எழுதுவதாகக் கூறினர்கள்.

பின்னர் நான் எனது வீட்டுக்குச் சென்றேன். சுமார் 5-30 மணியளவில் கூக்குரல் சப்தம் கேட்டது. பின் பத்துப் பதினைந்து காவற்காரர்கள் வருவதைப் பார்த்தேன். கருணுதிலக்காவும் அர்னேலிஸும் துவக்கு வைத்திருந்ததை நான் பார்த்தேன். இதையிட்டு நான் பீதி கொள்ளவில்லை. சிறிது நேரத்தில் தாக்குதல் சப்தம் கேட்டது. பின்னர் எம்மில் இருபத்தைந்து முப்பது பேர் ரேட்டுக்குச் சென்று பார்த்தேன். அப்பொழுது எனது காலிலும் கையிலும் சூடு விழுந்தது. நான் தேயிலைச் செடியுள் ஓடி ஒழிந்தேன். பின்னர் நான் வீட்டுக்குச் சென்றேன். பின்னர் ரேட்டுக்கு வந்தபொழுது இருவர் என்னைத் தூக்கி ரேட்டில் போட்டுவிட்டுச் சென்றனர். நான் ரேட்டிலேயே கிடந்தேன். பின்னர் அந்த இடத்துக்குப் பொலிஸார் வந்தனர். அவர்கள் என்னை நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு முதலில் எடுத்துச் சென்று பின்னர் கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவர்கள் எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர். கண்டி ஆஸ்பத்திரியில் நான் 10 நாட்கள் தங்கியிருந்தேன். அன்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினல் 7 பேர் காயமடைந்ததாவுகம் செல்லையா இறந்துவிட்டதாகவும் நான் அறிந்தேன். காங்கிரஸில் அதிக ஈடுபாடுள்ள இருவர் காயமடைந்ததாகவும் தெரியவந்தது.

தோட்ட நிர்வாகிகள் சார்பில் திரு. டி. எஸ். ஜயவிக்ரமாகுறுக்கு விசாரணை செய்த போது மெண்டிஸ் தெரிவித்ததாவது:-

கந்தோருககு வா வேலை தருகிறேன் என திரு. ஹார்லி பயமுறுத்தியதாக நான் டிஸ்டிறிக் காங்கிரஸிடம் கூறினேன். நான் ஒரு தொண்டர் தலைவன் அல்ல.

பார்: அங்கு 10 காவற்காரர்கள் இருந்தார்கள் என்பது உனககெப்படித் தெரியும்?

சாட்சி: அவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.

பார்: நீர் மக்கள் தாக்கப்படும் சப்தத்தைக் கேட்டீர். ஆனுல் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

சாட்சி: ஆம்.

கமிஷன்: அக்டோபர் 20-ம் திகதிக்கு முன்னர் நீர் தொண்டர் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டீரா? அல்லது நியமிக்கப்பட்டீரா?

சாட்சி: இல்லை.

கமிஷன் இதுபற்றி எதுவும் உமக்குத் தெரியுமா?

சாட்சி: தெரியாது:

பி. முனியம்மா என்னும் மற்ருெரு சாட்சி திரு. எம். டி. திருச்செல்வத்தினுல் விசாரணை செய்யப்பட்ட போது அவர் தெரிவித்ததாவது:-

நான் பதிவுசெய்யப்பெற்ற ஒரு இலங்கைப்பிரஜை. எனது சணவனும் இப்படிப்பட்ட பிரஜையே. நான் 1946 ல் இந்த தோட்டத்தில் வேலைசெய்ய ஆரம்பித்தபோது திரு. ஹொலண்ட் சுப்ரின்டன்டாக கடமையாற்றினர். திரு. ஹார்லி இந்தப் பதவிக்கு வந்தபின்னர் தொழிலாளர் கஷ்டத்துக்குள்ளாகினர்.

அவருககுக் காங்கிரஸைப் பிடித்துக்கொள்ளவில்லை. காங்கிரஸ் அங்கத்தவர் சிலர் வேலை நீக்கம்செய்யப்பட்டனர். திரு. ஹார்லி வருமுன்னர் வேலை செய்துகொண்டிருக்கும்போது தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு பால் கொடுக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனுல் ஹார்லி இதைத் தடைசெய்தார்.

திரு. ஜயவிக்கிரமா குறுக்கு விசாரணைசெய்தபோது சாட்சி தெரிவித்ததாவது:-

தொழிலாளர்களுக்குதேயிலை வழங்கப்பட்டது. ஆனுல் முன்னர் வழங்கப்பட்ட அளவு வழங்கப்படவில்லை. செல்லையா சுடப்பட்ட பின்னர் எல்லோரும் வேலைநிறுத்தம் செய்தனர். நானும் வேலைநிறுத்தம் செய்தேன்.

விசாரணை 23-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்று திரு. ஹார்லி இரகசியமாக சாட்சியமளிப்பார்.

---

# இறந்தவருக்கும் எதிரிக்குமிடையே மனஸ்தாபம் இருந்தது

## நாவாந்துறை கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவாந்துறையைச் சேர்ந்த லாரன்ஸ் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாய் செல்லத்தம்பி ஆசீர்வாதம் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு, யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றது.

சூசை அந்தோனிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எதிரியின் இருப்பிடத்திலிருந்து 200 யார்கருக்கப்பால் நான் வசிக்கிறேன். காலை 4-30க்கு வளவுகுள் ஏதோ சப்பதம் கேட்டு நான் விழித்தெழுந்தேன். சில பெண்கள் ஒன்றுகூடி லாரன்ஸைச் சுட்டதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். ஜனங்கள் லாரன்ஸைச் சுற்றி நின்றுகொண்டிருந்ததையும், அவர் உடலிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்ததையும் கண்டேன். அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளும் நிலையிலிருந்தார். அவரது தலையைத் தூக்கி என் மடியில் கிடத்தினேன். "பொன்னுத்துரையின் வேலியிலிருந்து அவன் என்னைச் சுட்டான்" என்று அப்போது அவர் கூறினுர். யார் சுட்டது என்பதைச் சொல்வதற்கு முன் அவர் பிரக்ஞையிழந்துவிட்டார். காலஞ்சென்றவரை ஒரு கார் மூலம் முதலில் பொலிஸ் ஸ்டேஷனுக்கும், பின் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கும் எடுத்துச்சென்றேன்."

அந்தோனிமுத்து பத்திநாதர் குறுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

"எதிரிக்கும் காலஞ்சென்றவருக்குமிடையே சில காலம் மனஸ்தாபம் இருந்தது. எதிரியின் ஒரு சகோதரரான நிக்கலாஸ் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட சம்பவத்தில் காலஞ்சென்றவரும் ஒரு எதிரியாய் இருந்தார். குற்றமில்லை என நிரூபிக்கப்பட்டு அவ்வழக்கில அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மருசிலீன், கான்ஸ்டபிள் குணரத்ன ஆகியோர் சாட்சியமளித்த பின், வழக்கு நவம்பர் 4-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

---

## வர்த்தக அறிவு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்குமுன் வர்த்தக பாடங்களை போதித்த பாடசாலைகளில் உயர்தர பாடசாலை தராதரபத்திர வர்த்தக வகுப்புகளை நடாத்தல் வேண்டும்.

சர்வகலாசாலைப் புகுமுக வகுப்பிற்கும் வர்த்தக பாடங்களை அனுமதித்தல்.

இலங்கை அரசாங்க மொழி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட சுருக்கெழுத்தில் சித்தியடைந்தோரையும் உதவிவர்த்தக ஆசிரியராக விண்ணப்பிக்க அனுமதிக்க வேண்டும்.

வர்த்தக பாடங்களை பரீட்சிக்கும் வினுத்தாள்களை தயாரிப்பவரும், பரிசோதிப்பவரும் திருத்துபவரும் மேற்படி வர்த்தக அறிவுடையோராக இருத்தல் வேண்டும்.

உயர்தரப் பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகிய இரு பாடங்களையும் தனித்தனிப் பாடங்களாகச்சேர்த்தல்வேண்டும்.

---

## இ. போ. ச. விசாரணைக்கமிஷன் முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தென்மராட்சி பஸ்பிரயாணிகள் சங்கம் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த இ. போ. ச. விசாரணைக்கமிஷன் முன் சாட்சியமளித்தது. திருவாளர்கள் எம். பரராசசிங்கம், எம். கந்தசாமி, சி. எம். சண்முகநாதன், வி. படைவீரசிங்கம், ஏ. கந்தையா ஆகியோர் இச்சங்கத்தின் பிரதிநிதிகளாக வந்திருந்தனர்.

இச்சங்கம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்களிற் சில வருமாறு:-

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் பிரயாணிகள் சௌகரியமாக தங்குவதற்கேற்ற தங்குநிலயம் அமைக்கப்படவேண்டும். பிரதான இடங்களில் கொட்டகைகளும், தொலைபேசி வசதியும் செய்துகொடுக்கப்படல்வேண்டும். இத்துடன் நேரசூசிப் பலகையும் இந்த இடங்களில் பிரத்தியட்சமாக வைக்கப்படல்வேண்டும்.

சாவகச்சேரி – கொடிகாமம் பஸ்சேவையை அபிவிருத்தி செய்யவேண்டும்.

---

## பளை வீமன்காமம் நெசவு நிலயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பளை வீமன்காமம் நெசவு நிலயம் மாணவர் பகிஷ்கரிப்பில்லாமல் தொடர்ந்து நடைபெறுவதாகவும் இந்நிலயத்திற்கும் நெசவு நிலயச் சம்பவங்களுக்கும் எந்த விதமான த்தொடர்புமில்லையெனவும் அறிவிக்கப்படுகிறது.

---

## நிதிமந்திரியின் சம்பளம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவு?

இந்தக் கேள்விகளுக்கு ஹொரவப்பத்தான எம். பி. திரு. ஈ. எல். பி. ஹூருல்ல (யு. என். பி.) முன்னறிக்கை கொடுத்திருக்கிருர். நவம்பர் 10-ந் திகதி இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படும்.

கொலன்னுவை எம். பி. திரு சிறில் மத்யூ (யு. என். பி.) கீழ்க்கண்ட கேள்விகளை நிதி மந்திரியிடம் கேட்பார்.

(1) பிரதமருக்கும் அவரது தூதுகோஷ்டிக்கும் இந்தியா, பிரிட்டன், யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வர எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது?

(2) 1960—61 ஆண்டுகளில் நிதிமந்திரிக்கும் அவரது தூதுகோஷ்கிக்கும் பிரிட்டன், யூகோஸ்லேவியா, கானு, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றுவர எவ்வளவு செலவாயிற்று?

(3) 1960—61-ம் ஆண்டுகளில் இதர மந்திரிகளுக்கும் எம். பி.க்களுக்கும் ஏற்பட்ட வெளிநாட்டுப் பிரயாணச் செலவு எவ்வளவு?

---

## திருட்டு வழக்கில் எதிரிகள் விடுதலை

மன்னுர், ஞாயிறு

மன்னுரைச்சேர்ந்த பி. ரஷீத், ஏ. ஸி. அபுசாலிஹ், கே. அப்துல்லா, காலஞ் சென்ற பிச்சையின் மனைவி சுலைஉம்மா ஆகியோர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஸ்டோரை உடைத்து ரு. 20385-83 பெறுமதியான பொருள்களைக் களவாடியதாக மன்னுர் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஏ. டபிள்யு. ஹரிக்கஸ்ஸினல் தொடரப்பட்ட வழக்கு மன்னுர் மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

மாஜிஸ்டிரேட் எதிரிகளை விசாரணை செய்த பின்னர் அட்டர்னி ஜெனரலின் உத்தரவின்படி அவர்களை விடுதலை செய்தார்.

எதிரிகளிடமிருந்து பொலீஸார் பெற்ற 4500 ருபாவையும் திருப்பிக் கொடுக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்

---

## சிறப்பான கிறிஸ்துமஸ்

கொழும்பு, ஞாயிறு

கிறிஸ்துமஸ் பொருட்களின் இறக்குமதித் தடை ஓரளவு தளர்த்தப்பட்டதின் காரணமாய் இவ்வாண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை எதிர் பார்த்ததை விடச் சிறப்பாயிருக்கும் எனத் தெரிகிறது.

விளையாட்டுச் சாமான்களுக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடு, இப்போது தளர்த்தப்பட்டிருக்கிறது.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் இந்தியா சென்று பட்டுப்புடவை நெசவைக்கற்று வந்தால் இங்கு 5 பேர் சேர்ந்து 10 ஆயிரம் ரூபாய் முதல் போட்டுப்பட்டுபுடவைகளை உற்பத்தி செய்யலாமென்றும், ஒரு புடவைக்கு 50 ரூபாய்வரை லாபம் கிடைக்கலாமென்றும் ஏதாவது சிறியகூறி கைத்தொழில்களைப் பயிலுவதில் பெண்கள் ஊக்கம் காட்ட வேண்டுமென்ருர்.

முடிவாக தெய்வத்தில் பூரண நம்பிக்கை வைத்து. நமக்குள்ளே இருக்கும் தெய்வத்தைத் துணை கொண்டு வாழ்க்கை நடத்தினுல், இன்பமே எந்நாளும் துன்பமில்லை. என்றும் அவர் அறிவுறுத்தினுர். இந்தப் பிரசங்கத்தை அப்படியே பூரணமாக அச்சடித்து எல்லாப் பெண்களுக்கும் விநியோகித்தால் எவ்வளவோ பலனுண்டு என்று தோன்றியது.

* * *

நேற்று காலை கீரிமலைக்குப் பக்கத்திலுள்ள திருவடி நிழல் கடற்கரையில் சில நண்பர்களுடன் ஸ்நானம் செய்யப்போனேன். கொழும்பிலும் தெற்கிலும் ஸ்நானத்துக்கு இவ்வளவு சுகமான இடம் இல்லை என்ருர் கொழும்பிலிருந்து வந்த அன்பர். யாழ்ப்பாணத்திலுள்ள இந்த இடத்தை தக்கபடி அபிவிருத்தி செய்தால், இதை முக்கியமான யாத்திரீகர் ஸ்தலமாக்கலாம். பிரதமர் இந்தப்பக்கம் சற்றே கவனம் திருப்புவாரா?

---

கொழும்பு, ஞாயிறு

வருகிற 24ம் திகதி ஐ. நா. தினம் சம்பந்தமாய் கொழும்பு ராயல் கல்லூரி மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். பிரதமர், நிதி மந்திரி ஆகியோர் இதில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

# "சனசமூக நிலையங்களின் வளர்ச்சி போதுமானதாயில்லை"

## திருமலைப்பகுதி சமாஜமகாநாட்டில் பேச்சு

திருக்கோணமலை, ஞாயிறு

"சனசமூக நிலைய வளர்ச்சிக்கு வித்திட்டவர் காலஞ்சென்ற நமது பிரதமர் பண்டாரநாயக்கா. அதைத் தொடர்ந்து பல பெரியார்களின் முயற்சிகளால் இவ்வியக்கம் வளர்ந்துள்ளது. ஆயினும் இவ்வளர்ச்சி இலங்கை போன்ற நாடுகளில் போதுமானதாயில்லை. இந்தியா இப்படியான இயக்கங்களால் தனது சுயதேவையைப் பூர்த்தி செய்துவருகின்றது" எனத் திருமலைப்பகுதி ஸ்தலஸ்தாபன' உதவி ஆணையாளர் திரு. என். சிவராசா அண்மையில் நடைபெற்ற சனசமூகநிலையங்கள் சமாஜ மாநாட்டில் பேசுகையில் கூறினர்.

"அறிவுடன் பொளாதாரமும் பண்பாடும் ஒருங்கே வளர்ந்தால் தான் நமது நாடோ, சமுதாயமோ முன்னேறமுடியும். பண்டைக் காலத்தில் ஆலயங்கள் வழிபாட்டு நிலையங்களாக மட்டுமல்ல அறிவூட்டும் கலைக் கழகங்களாகவும் மிளிர்ந்தன" என்றும் அவர் கூறினர். திரு. ஆர். வடிவேலு, பேசுகையில், இக்கால மாணவர்கள் ஓய்வான நேரங்களில் துப்பறியும் நூல்கள் வாசிப்பதில் நேரத்தைச் செலவிடுகின்றனர் எனவும் இது வருங்கால மக்களாகிய மாணவர்கள் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்குமெனவும் நல்ல அறிவு நூல்களையும் நாட்டுப்பாடல்களையும் வாசித்தல் வேண்டுமெனவும் கூறினர்.

## இட மாற்றம்

மத்துகம, ஞாயிறு

மத்துகம ஆனந்த சாஸ்திராலயத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக உடற்பயிற்சி ஆசிரியராகவும், உணவு ஆராய்ச்சி, நுண்கலை ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு அ. முருகையா யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துகல்லூரியின் உடற்பயிற்சி ஆசிரியராக மாற்றலாகிச் செல்கிருர்.

திரு. அ. முருகையா கொழும்புத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெற்று ஈராண்டுகள் உணவு ஆராய்ச்சி, நுண்கலைப் பயிற்சி பெற்ருர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "உலக அமைதிக்கு மதபக்தி அவசியம்"

## கதிரேசன் கல்லூரியில் நவராத்திரி கலைவிழா

நாவலப்பிட்டி, ஞாயிறு

'இன்றைய உலகம் பலவகையாலும் அமைதியிழந்து செல்கிறது. மதபக்தி குறைந்துவருவதே இதற்குக் காரணம். போட்டி. பொருமை, பேராசையினுல் அல்லல்படும் உலகத்தை அமைதியுடையதாக்க மதபோதனைகளை தீவிரப்படுத்த வேண்டும்' என நாவலப்பிட்டி வட்டார வித்தியாதரிசகர் ஜனுப் எம். ஏ. சி. எம். ஜிப்ரி கதிரேசன் கல்லூரி நவராத்திரி கலை விழாவில் பேசுகையில் கூறினர்.

கல்லூரி மாணவர்களின் நடனம், நாடகம், பேச்சு, பாடல் முதலான நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெற்றன.

ஜனுப் ஜிப்ரி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

எல்லா மதங்களும் மக்களுக்கு நற்போதனைகளையே புகட்டுகின்றன. இன்றைய உலகற்கு மதபக்தி அவசியம் தேவை. முற்காலத்து மக்கள் மத பக்தி உடையவர்களாக இருந்ததால் தெய்வப் புலமை உடையோர் தோன்றினர். பிஞ்சு உள்ளங்களில் சிறிய வயதிலிருந்து மத அனுஷ்டானங்கள் புகட்டப்படவேண்டும். கல்வியின் பயன் கடவுளை அடைவதே என்று தெய்வப் புலமை திருவள்ளுவர் கூறியிருப்பதை நாம் சிந்திக்க வேண்டும்."

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா புதிய மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைத்தார். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி பார்சல்களும் வழங்கப்பட்டன.


சினிமா செய்தி!

சுடச்சுட வாசிக்க விரும்புகிறீர்களா!!

தினத் தந்தி
DAILY THANTHI

யை தினமும் படியுங்கள்

வடமாகாணம் முழுவதற்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

சோல் ஏஜண்ட்ஸ்:

வெஸ்டன் நியூஸ் ஏஜன்ஸீஸ்

63. பேங்சால் வீதி, — கொழும்பு–11.


# நவராத்திரிவிழாவும் சரஸ்வதிபூசையும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"உலக வல்லரசுகள் யாவும் இன்று யுத்தக் கெடுபிடியில் ஈடுபட்டிருக்கின்றன. ஏனைய நாடுகள் யுத்த பீதியில் கிடந்துஅவதிப்படுகின்றன. அணு, ஜலஜ குண்டுகள் ஈவிரக்கமின்றிப் பரீட்சிக்கப்படுகின்றன. கடந்த யுத்தத்தையும் அதனுல் ஏற்பட்ட விளைவுகளையும் நன்கு அனுபவித்துச் சலித்துப்போன மக்கள் மீண்டும் இன்னெரு யுத்தமாஎன்று ஏங்குகிருர்கள். மகிடாசுரனை வதைத்து, உலகில் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநிறுத்கிய சக்தி நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் யுத்த அரக்கனையும் நாசம் செய்து, நம்மனைவரையும் காத்து, உலகில் நல்லெண்ணத்தையும், சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்தி அருள்வாளாக"

இவ்வாறு யாழ்ப்பாணம் காந்திநிலையத்தில், சிவியா தெரு சனசமூக நிலையத்தாரால் கொண்டாடப்பட்ட சரஸ்வதிபூசையில் திரு. நா. முருகேசன் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் சு. தம்பாபிள்ளை, வ. இராசையா, ம. சின்னையா ஆகியோரும் சக்தி பூசை செய்யப்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திப்பேசினர்.

ஃ ஃ ஃ

நீர்வேலி, ஞாயிறு

நீர்வேலி ஸ்ரீவிநாயக சனசமூக நிலையததில் வியாழக்கிழமை சரஸ்வதிபூசை கொண்டாடப்பெற்றது. அத்தருணம் ஸ்ரீவிநாயக பக்தசபையினரால் கூட்டுப்பிரார்த்தனையும் தேவி பூசையும் நடைபெற்றன.

ஃ ஃ ஃ

தொல்புரம், ஞாயிறு

தொல்புரம் மத்திய சனசமூகநிலையத்தின் ஆதரவில் நிலையமண்டபத்தில் திரு. கே. சின்னத்துரை தலைமையில் நவராத்திரிவிழாவும் சரஸ்வதி பூசையும் கொண்டாடப்பட்டன.

கூட்டுப்பிரார்த்தனைகள், பக்திப்பாடல்கள், உபந்நியாசங்களும் இடம்பெற்றன.

ஃ ஃ ஃ

நீர்வேலி, ஞாயிறு

ஆவரங்கால் மத்திய சனசமூகநிலையம் கிராமமுன்னேற்றச்சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் சங்கமண்டபத்தில் சரஸ்வதிபூசையும் நவராத்திரிவிழாவும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. நிலையத்தலைவரான திரு. கே. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றன.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள் 23-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-15 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 சத்தியவதி இராஜு வீணை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 எஸ். பரம் தில்லைராஜா - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சுவாமிமலை எஸ். ஜானகிராமன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 ஜி. என். ராஜகோகிலம் - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல் 7-35 நல்லுரை, 7-40 திரைப்படஇசை, 8-00 சுவாமிமலை எஸ். ஜானகிராமன் - பாட்டு, 8-00 டெல்லிஅஞ்சல், 8-50 வாத்தியஇசை, 9-15 இசைக் கோவை, 9-30 ஜி என். ராஜகோகிலம் - பாட்டு.

# 'தொழிற் சங்கங்கள் வியாபாரமாக மாறிவிடுகிறது'

## மீன்துறை பகுதி கூட்டத்தில் திரு. ரத்னயகா

மத்துகம, ஞாயிறு

"இந்த நாட்டில் தொழிற் சங்கம் ஒரு வியாபாரமாக மாறிவருகிறது. இப்படி அடிக்கடி காளான்களைப் போன்று தோன்றும் சங்களினுல் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுவதற்குப் பதில் கட்டுப்பாடின்மையும், நஷ்டமும் தான் ஏற்படும்'' எனமீன்துறைப் பகுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் திரு. ரத்னயக்கா கூறினர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் களுத்துறை மாவட்டத்தின் சார்பில் மீன்துறைப் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

"தொழிற் சங்கத்தில் தொழிலாளர் சேர்வது அவர்களின் குறைகளை முதலாளிமார்களிடம் தெரிவித்து பரிகாரம் காணவே ஆகும் ஆனல் இப்பகுதியில் ஒருசில தொழிற் சங்க முதலாளிகளின் ஆதரவில் வளர ஊக்கின்றன. இவைகளால் எப்படி தொழிலாளர்கள் நன்மைபெற இயதும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலாளிகளின் ஆதரவின்றி கட்டுப்பாட்டோடு தொழிற் சங்கம் நடைபெற்ருல்தான் நம் குறைகளுக்கு விமோசனம் ஏற்படும் என்றும் அவர் கூறினர்.

கூட்டத்தில் செல்வி எம். சங்கரவடிவு வேறுபலரும் பேசினர்கள்.

## திருமலையில் நவராத்திரியும் இசை நிகழ்ச்சிகளும்

திருமலை, ஞாயிறு

இவ்வருடம் சென்றவருடங்கள் போலன்றி சொற்பொழிவுகளுடன் இசைநிகழ்ச்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு நவராத்திரி விழாக்களைச் சிறப்பித்தன.

சிவயோக சமாஜம், திருவள்ளுவர் கழகம், அருள்நெறி மன்றம், சண்முகவித்தியாலயம் ஆகிய இடங்களில் நவராத்திரி விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## திருமலை தமிழ் பல்கலைக்கழகம்

திருமலை, ஞாயிறு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விவசாயப்பகுதி, திருமலையில் 1962-ம் ஆண்டு ஜுன் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க கட்டட வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இவ் வேலைகளுக்கு தொழிலாளர்கள் நிறைய வேண்டியுள்ளது எனவும், யாழ்நகர், வவனியா, மட்டுநகர் ஆகிய இடங்களிலிருந்து தொழிலாளர்கள் வருகின்றனர் எனவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர்.

# "விழாவினுல் மக்கள் பயனடையவேண்டும்"

## நவராத்திரி விழா கூட்டம்

வேலணை, ஞாயிறு

"விழாக் கொண்டாடுபவர்களுக்கும் விழாவைக் கண்டு களிப்பவர்களுக்கும் ஒரு நோக்கம் இருக்கவேண்டும். வெறும் ஆரவாரங்கள் செய்வதால் பயனில்லை. விழாவினுல் மக்கள் பயனடையக் கூடியதாக இருக்கவேண்டும். இந்த நவராத்திரி விழா சமய உண்மைகளை எடுத்துக் கூறும் ஒரு ஒப்பற்ற விழாவாக அமைந்துள்ளது" என வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் தலைமை வகித்துப் பேசிய சைவவித்தியாவிருத்திச் சங்கப் பிரமுகர் ஆசிரியர் திரு. சி. சதாசிவம்பிள்ளை குறிப்பிட்டார்.

ஆசிரியர் க. சி. குலரத்தினம் பேசுகையில் விஞ்ஞானத்துக்கும் மெய்ஞானத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டென்றும் விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி. சமயம் கலவாத விஞ்ஞானம் குருடு. சைவசமயம் விஞ்ஞானம் கலந்த சமயம் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் திருவாளர்கள் இ. மகாதேவா (தேவன்) ஐ. பொன்னையா, வித்துவான் பொன். அ. கனகசபை ஆகியோரும் பேசினர்.

மாணவர்களின் கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. தலைமையாசிரியர் வித்துவான் இ. பொன்னையா நன்றியுரை கூறினர்.

## சரஸ்வதி பூசை கூட்டம்

திருமலை, ஞாயிறு

"மனிதன் பேராற்றல், பெருஞ்செல்வம், பேரறிவு பெற்று பேரின்பமுற்று இறைவனை அடையும் குறிக்கோளுடன்தான் நவராத்திரி விழாக்கள் கொண்டாடப்படுகின்றது. சக்திவழிபாடு ஆரியருக்குப் பின்னர்தான் வழக்கிலேற்பட்டது எனும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆரியருடைய வருகைக்கு முன்னரே தமிழகத்தின்கண் இவ்வழிபாடு நிலவியுள்ளது என்ற கருத்து சிலப்பதிகாரத்தில் "கொற்றவை" என்று சக்தி அழைக்கப்படுவது மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று திரு. வெங்கடேச சர்மா இந்துக்கல்லூரியில் நிகழ்ந்த சரஸ்வதி பூசையில் பேசுகையில் கூறினர்.

## நெசவுசாலையில் களவு

உடுப்பிட்டி, ஞாயிறு

கடந்த புதன்கிழமை இரவு மூத்த நயினர் கோவிலுக்கருகாமையிலுள்ள நெசவுசாலையில் 48 சாரங்கள், 23 துவாய்கள், மணிக்கூடு, நூற்பந்துகள், படங்கள் ஆகியன திருடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இதன் விலைவாய் ரூபா 800 நட்டமேற்பட்டுள்ளதாம்.

புலன்விசாரணை நடைபெறுகிறது.

யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி

# ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரி வெற்றி

## மத்திய கல்லூரி தோல்வி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினுல் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த சனிக்கிழமை நான்கு கல்லூரிகள் கலந்துகொண்டு, இரு போட்டிகள் நடைபெற்றன.

முதலாவது போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி முதலாம் பிரிவுக் கோஷ்டியும், காரைநகர் இந்துக் கல்லூரி முதலாம் பிரிவுக் கோஷ்டியும் கலந்து கொண்டன.

காரைநகர் இந்துக் கல்லூரி இடது கோடி முன்னணி வீரரான ஏ. செல்வரத்தினம்தனது கோஷ்டிக்கு ஒரு கோலையேனும் போட்டுக் கொடுக்கப் பல முறை முயற்சித்தாரெனினும் அவரது திறமைக்குப் பக்க பலமில்லாமை, கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிக் கொடுக்க முடியாமற் செய்துவிட்டது.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக் கோஷ்டி அன்று கச்சிதமாக விளையாடி இரசிகர்களின் பாராட்டுதல்களைப்பெறத் தவறவில்லை. வலது கோடி முன்னணி வீரரான எஸ். குணபாலசிங்கம், முன்னணி மத்திய வீரர் டி. குணலிங்கம் 'புல்பாக்' வீரர்களான சிதம்பரநாதன், இராசதுரை, முன்னணி வீரர் கனகரத்தினம் ஆகியோரின் திறமையைப்பெற்றிருக்கும் இக்கோஷ்டி இடைவேளைக்கு முன் ஒரு கோலையேனும் போடவில்லை. இடைவேளைக்கு முன் பல கோல்களைப் போட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை பல முறை தவறவிட்டுவிட்டார்கள். கோல்காப்பு வீரர் அமிர்தலிங்கம் சிறிது அச்சத்தையும் சேர்த்துப் பந்துடன் கட்டியணைத்துச் சில சமயங்களில் படுத்திருந்தாலும் இடைவேளைக்குப் பின்னும் காரைநகர் கோஷ்டி ஒருகோலையேனும் போட முடியாமற் போய்விட்டது.

இடை வேளைக்குப் பின் புத்தூர் கல்லூரி தொடர்ந்து 3 கோல்களைப் போட்டு மகத்தான வெற்றியை ஈட்டிக் கொண்டது.

திரு. மகாதேவன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கலந்துகொண்டன. எதிர்பார்த்தளவுக்கு இரண்டு கோஷ்டிகளும் விளையாடவில்லை. இரு கோஷ்டிகளுக்கிடையேயும் விளையாட்டுக்குரிய எண்ணம் இருந்தனவேயன்றி அதனைச் செயல்படுத்தத் தவறிவிட்டார்கள்.

இடைவேளைக்குப் பின் யூனியன் கல்லூரி சிறிது பாராட்டக்கூடியதாக விளையாடிய போதும் இக்கோஷ்டிக் கோல்காப்புவீரர் மத்திய கல்லூரிக்கு ஒரு கோலைப் போடத் துணை புரிந்தார். மத்திய கல்லூரி 2 கோல்களையும் யூனியன் கல்லூரி 3 கோல்களையும் பெற்று யூனியன் கல்லூரி வெற்றியீட்டியது.

திரு. டி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விக்னேஸ்வரா வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தாரால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் விக்னேஸ்வராக் கல்லூரி, வதிரி திரு. இருதயக் கல்லூரி 3-ம் பிரிவுக் கோஷ்டியை 1—0 கோலால் தோற்கடித்தது.

## கைப்பந்தாட்டம்

பண்ணைகம், ஞாயிறு

பண்ணைகம், தெற்கு சனசமூக சேவாசங்க கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் சண்டிலிப்பாய் இளைஞர் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பண்ணைகம் கோஷ்டி 2—1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

## 4 கிராமங்களில் அம்மை நோய்

குருநாகலை, வெள்ளி

குருநாகலைப் பகுதியில் நான்கு கிராமங்களில் 10 பேர்களுக்கு பெரியம்மை நோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மூவர் பெரியம்மை நோயினல் மரணமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பெற்றோர்தின விழா

தெல்லிப்பழை, ஞாயிறு

வீமன்காமன் ஆங்கில பாடசாலைப் பெற்றோர்தின விழா வருகிற செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் வட்டார வித்தியாதரிசகர் திரு. ஆ. சிவகுரு தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## ரூ. 2000 பெறுமதியான பாக்கு மூடைகள்

### கட்டுமரத்திலிருந்து கைப்பற்றப்பட்டன

தெல்லிப்பழை, ஞாயிறு

தாழையடியில் வைத்து யாழ்ப்பாணம் சுங்க இலாகா அதிகாரிகளினுல் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான 33 பாக்கு மூடைகள் இயந்திரம் பூட்டப்பட்ட கட்டுமரத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த போது கைப்பற்றப்பட்டன.

தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்ற அதிகாரிகள் பாக்கு மூட்டைகள் ஏற்றிவைக்கப்பட்ட கட்டுமரத்தைக் கண்டனர். இப்பாக்கு மூடைகள் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்படுவதற்காக இருந்தது என்று தெரிகிறது.

## யாழ்ப்பாணம் இசையாளர் அபிவிருத்தி ஐக்கிய சங்கம்

தெல்லிப்பளை, ஞாயிறு

இசையாளர்கள் பெரும்பான்மையான மக்களின் அன்பிலும் ஆதரவிலும் வாழுகின்றவர்களென்றும் இவர்கள் அரசியல் தலையீட்டுக்குள் சிக்கிவிடக்கூடாதெனவும் யாழ்ப்பாணம் இசையாளர் அபிவிருத்தி ஐக்கிய சங்கக் காரியதரிசியான திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுங்க இலாகா கலெக்டர் திரு. கே. திருநாவுக்கரசு இது சம்பந்தமாக விசாரணை நடத்தினர். விசாரணையின் பின் கட்டுமரத்தையும் பாக்கு மூடைகளையும் பறிமுதல் செய்யுமாறு உததரவிட்டார்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது...






குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெடோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.

# கலை அரங்கம்

## சினிமா மனிதப் பண்பைக் குறைக்கக்கூடாது

திரைப்படங்கள் மனிதன் பண்பு குறையச் செய்யக் கூடாது. அவன் அறிவு விரிவடையவும் களைப்பை நீக்கி ஊக்கமூட்டவுமே உதவவேண்டும் என்று வாடிகன் நகரில் நடந்த சர்வதேச கத்தோலிக்க திரைப்படக்கூட்டத்தில்பேசும் போது போப்பாண்டவர் குறிப்பிட்டார்.

---

## ஸ்ரீதரின் அடுத்த படம்

'தேன் நிலவை' வெளியிட்ட ஸ்ரீதர் அடுத்ததாக, படப்பிடிப்பு துவங்கி இருபதே நாட்களில் முடிக்கக்கூடிய விதத்தில் ஒரு சமூகக் கதையைப்படமாக்கப்போகிருர். ஒரு டாக்டர், நான்கு நோயாளிகளைக் கதாபாத்திரமாகக்கொண்ட இதன் கதை வசனத்தை ஸ்ரீதர் எழுதி முடித்துவிட்டார்.

பல புதுமுகங்கள் நடிக்கப் போகும் இந்தப்படத்தின் சங்கீதத்தை விஸ்வனதன் ராமமூர்த்தி அமைக்கலாம். நவம்பர் இரண்டாவது வாரத்தில் படப்பிடிப்பு ஆரம்பமாகலாமெனக் கூறப்படுகிறது. இதை ஸ்ரீதரே டைரக்ட் செய்வார்.

---

## ஒரு கதைக்கு 55,00,000 டாலர்!

வார்னர் பிரதர்ஸார் 'மை பேர் லேடி' என்ற நாடகக் கதையைச் சினிமாப்படமாக்குவதற்கான உரிமைக்காக 55,00,000 டாலர்கள் விலை கொடுத்துள்ளனர். இந்த நாடகம் ஜார்ஜ் பெர்னட்ஷாவின் 'பிக்மேலியன்' கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

## கன்னடப் படத்திற்கு பெண் இசையமைப்பாளர்

சர்வோதயா சித்ராவின் 'பக்த கபீர்' கன்னடப்படத்திற்கான இசைப்பொறுப்பை எச். எஸ் அனுசூயா என்ற பெண் ஏற்றுள்ளார். கன்னடப்படவுலகில் முதன்முறையாக ஒரு படத்தின் இசைப்பொறுப்பை ஏற்றுள்ள பெண்மணி இவர்தான். ராஜ்குமார் முக்கிய பாகத்தில் நடிக்கும் இப்படத்திற்கான பாடல்களையும் வசனத்தையும் சி. எச். ஐ. சதாசிவய்யா எழுதுகிருர். சுந்தரராவ் டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ளார்.

---

## "கப்பலோட்டிய தமிழன்" தீபாவளி வெளியீடு

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்து வரும் "கப்பலோட்டிய தமிழன்" நிச்சயம் தீபாவளியன்று வெளிவருமென அறிவித்துள்ளனர்.

சுதந்திதாகத்தை மக்களிடையே உண்டாக்கிய வீரர் வ. உ. சியாக நடிகர் திலகம் தோன்றும் இச் சித்திரத்தில் வ. உ. சி. யின் மனைவியாக வெகு நாட்களுக்குப் பிறகு திரையுலகில் தோன்றும் குமாரி ருக்மணி நடிக்கிருர். மற்றும் மாடசாமியாக ஜெமினியும், அவரது மனைவியாக சாவித்திரியும் தோன்ற, நாகையா, பாலாஜி, டி. கே. சண்முகம், அசோகன், எஸ். வி. சுப்பையா, டி. எஸ். துரைராஜ், ஜெமினி சந்திரா, டி. பி. முத்துலக்ஷ்மி ஆகியோர் நடிக்கின்றனா.

வசனங்களை எஸ். டி. சுந்தரம் எழுத, இசையை ஜி. ராமனுதன் அமைக்க, பி. ஆர். பந்துலு தயாரித்து டைரக்ட் சய்கிருர்.

## சென்னைமக்களும் சினிமாவும் பண்டிதநேரு கருத்து

சென்றவாரம் சென்னைக்கு விஜயம்செய்த பாரதப் பிரதமர் திரு. பண்டிதஜவஹர்லால் நேரு அக்டோபர் 8-ந் திகதி காலை இஷ்டபூர்வ சுகாதார சேவைத்திட்ட மருத்துவ நிலையத்திற்கு அத்திவாரக்கல் நாட்டிப் பேசியபோது சினிமாவைப்பற்றியும் குறிப்பிட்டார். அவர் பேசுகையில் கூறியதாவது:-

"நான் கடந்த நாற்பது ஆண்டுக்காலமாக நாம் நாட்டைச் சுற்றிப்பார்த்து வருகிறேன். மக்கள் இப்பொழுது பொதுவாக முன்பு இருந்ததைவிட நல்ல உணவு உட்கொண்டு, நல்ல உடை அணிந்துகொண்டிருப்பதைக் காண்கிறேன். உணவு, உடை மட்டுமென்ன, இதர சில செலவுகளுக்கும் அவர்களிடம் பணம் மிஞ்சுவதைப் பார்க்கிறேன். சென்னை மக்கள் இரண்டு விஷயங்களில் அதிகப் பணம் செலவழிப்பதாகவும் கேள்விப்பட்டேன். ஒன்று சுற்றுப்பிரயாணம்; மற்றொன்றுசினிமா - நல்லபடமோ, கெட்டபடமோ! மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதென்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன" என்ருர்.

---

## சர்ச்சிலின் வாழ்க்கை படமாகிறது

ஹுக் பிரெஞ்ச் என்பவர் பாரமௌண்ட் நிறுவனத்துக்காக சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கையைப் படமாகத் தயாரிக்கவிருக்கிருர். இதற்கான திரைக்கதையை எழுதுவதற்காக போர்டன் சேஸ் என்பவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் சர்ச்சில் எழுதிய 'மை எர்லி லைப்' 'தி வேர்ல்ட் கிரிஸிஸ்' ஆகிய புத்தகங்களின் உதவி கொண்டு திரைக்கதையை எழுதுவார்.

1908-ல் சர்ச்சிலுக்குத் திருமணம் ஆவதற்கு முன்புவரை நடந்த நிகழ்ச்சிகள் அவர் வாழ்ந்துவந்த உண்மையான இடங்களிலே எடுக்கப்படும். பிரபல நட்சத்திரங்கள் நடிக்கவிருக்கும் இப்படம் விரிதிரை முறையில் டெக்னிகலரில் தயாரிக்கப்படும்.

---

## தீபாவளியன்று சென்னையில் திரைப்படவிழா சாந்தி தியேட்டரில் ஆரம்பமாகிறது

### திரு. காமராஜ் துவக்கிவைக்கிருர்

இம்மாதம் புதுடில்லியில் ஆரம்பமாகும் இந்தியாவின் இரண்டாவது சர்வதேசத் திரைப்பட விழாவைத் தொடர்ந்து அந்த விழா சென்னையில் தீபாவளிதினத்தன்று ஆரம்பமாகி ஒருவாரகாலம் நடைநடைபெறும்.

தீபாவளி தினமான நவ. 7ந் தேதியன்று மாலை 6 மணிக்கு சாந்தி தியேட்டரில் துவங்கும் இந்த விழாவை, தமிழகத்தின் முதலமைச்சர் திரு. காமராஜ் துவக்கிவைக்கிருர்.

---

## பிரசாத் படத்தில் சிவாஜிகணேசன் "பெண் மனம்" படமாக்கப்படும்

பிரபல நாவலாசிரியர் லக்ஷ்மியின் "பெண்மனம்"த்தை டைரக்டர் பிரசாத் திரைப்படமாக்கப்போவது ஏற்கனவே வெளிவந்த விஷயம். இப்படத்தில் நடிகர்திலகம் சிவாஜி கணேசன் கதாநாயகனாக நடிப்பாரெனத் தெரிகிறது. இப்படத்திற்கான வசனங்களை மு. கருணாநிதி எழுதுவார்.

# சினிரமாவில் மற்றொரு முன்னேற்றம் "இடினெரமா"

பிரெஞ்சுக்காரர்கள் சினிரமாவிலே சற்று மாறுதல் செய்து 'இடினெரமா' என்ற பெயரில் ஒரு புரட்சியைச் செய்துள்ளனர். இம்முறைப்படி ஒரே சமயத்தில் 3000பேர்கள் ஒன்ருக அமர்ந்து படம் பார்க்கலாம். இதற்காக உள்ள திரை 100 அடி நீளமும் 40 அடி உயரமும் கொண்டதாக இருக்கும்.

இதற்காகவென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள கூடாரமே தியேட்டராகும். 210 அடி நீளமும் 144 அடி அகலமும் 62 அடி உயரமும் கொண்ட இந்தத் தியேட்டர் காற்றழுத்தத்தால் தானுக 'மிதந்து' கொண்டிருக்கும். இதிலுள்ள விசேஷம் என்னவென்ருல் நெருப்பால் அழிக்க முடியாத—தண்ணீரால் நனைய முடியாததாக இருப்பதுடன் வெளியில் கேட்கும் எபபடிப்பட்ட சத்தமும் உள்ளே கேட்காதபடி இதன் கூடாரத் தடுப்பு அமைக்ப்பட்டிருப்பதுடன் இதன் உள்ளே 'ஏர்—கண்டிஷனும்' செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு வசதியிருந்தும் இதைப் போடுவதற்குப் பதினைந்து நிமிடங்கள் போதுமானது. மேலும் சக்கஸ் கூடாரங்களைப் போல 40 லாரிகள் மூலம் எங்கு வேண்டுமானுலும் எடுத்துச் செல்லலாம்.

இந்தியா போன்ற 'டூரிங் டாக்கீஸ்கள்' அதிகம் இருக்கும் நாடுகளில் இது மிகவும் பயன்படுவதாக இருக்கும். இப்போது இது பிரிட்டனில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி வருகிறது.

---

## காந்திஜியின் வரலாறு?

ஹாலிவூட்டில் மகாத்தா காந்தியின் வாழ்க்கையைப் படமாக்குவதற்கான ஏற்பாடுகளை மிக மிக ரகசியமான முறையில் தயாரிப்பாளரும் டைரக்டருமான மார்க் ராப்ஸன் என்பவர் செய்து வருவதாகத் தெரிகிறது. 'பிரொஜக்ட் 942' என்று மட்டும் பெயரிடப்பட்டுள்ள இப்படம் நவம்பர் மாதத்தில் செட்டுக்குப் போகுமெனத் தெரிகிறது.

பிரிட்டனிலுள்ள 'சர் அலெக் கைனல்' என்பவர் யாராவது காந்திஜியின் வாழ்க்கையைப் படமாகத் தயாரித்தல் அதில் நடிக்கலாமென்ற நம்பிக்கையுடன் மகாத்மாவின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றியும் அவரது நடையுடைபாவனைகள் பற்றியும் மிக அக்கறையுடன் படித்து வருகிருர். ஆனுல் இன்று வரை அவர் நடித்து அப்படியொரு படம் வெளிவரவில்லை. மேலும் ராப்ஸனது படத்தில் யார் யார் நடிக்கப் போகிருர்கள் என்பதும் தெரியவில்லை. ஆனுல் ஒரு வேளை மகாத்மாவின வேடத்தில் நடிப்பதற்கு இந்திய நடிகர் யாராவது தேர்ந்தெடுக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

## சகோதரிகளாக பானுமதி சௌகார்ஜானகி!

### ஏ. வி. எம். தற்போதைய தயாரிப்பில்

பிரபல வங்காள ஆசிரியரான ரஞ்சன் குப்தாவின் கதையான "மாயமிருகா"வை அடிப்படையாகக் கொண்டு ஏ. வி. எம். புரொடக்ஷன்சார் தங்களுடைய 43வது தயாரிப்பை தமிழில் துரிதமாக தயாரித்து வருகின்றனர்.

சகோதரிகளின் இடையே ஊடுருவி நிற்கும் பாசத்தை வெளிப்படுத்தும் இச் சித்திரத்தில் பானுமதியும், சௌகார் ஜானகியும் சகோதரிகளாகத் தோன்றுகின்றனர். சௌகார் ஜானகியின் மகளாகா மாடிலக்ஷ்மியின் சகோதரி குமாரி கச்சுவும் அவருடைய காதலனுக புது முகம் ஹரிநாத்தும் நடிக்கின்றனர்.

### சந்திரபாபு

மற்றும் ஹாஸ்ய பாகத்தில் சந்திரபாபு தோன்றும் இப்படத்தில் எஸ். வி. ரங்கராவ், முத்தையா நடிக்கின்றனர். சுதர்சனம் இசையமைக்க, வசனங்கள் கே. எஸ். கோபால கிருஷ்ணன் எழுத, கிருஷ்ணன், பஞ்சு டைரக்ஷனில் இப்படம் உருவாகிறது.

---

## இரட்டை வேடத்தில் சாவித்திரி

### வசுமதி பிக்சர்ஸ் தயாரிப்பில்

"வணங்காமுடி" திரைப்படத்தில் சாவித்திரி இளவரசியாகவும், நரிக்குறத்தியாகவும் இரட்டை வேடத்தில் தோன்றி திறன்பட நடித்தாரல்லவா!

இரட்டை வேடித்தில் நடிக்க மற்றொரு சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்துள்ளது!

வசுமதி பிக்சர்ஸ் என்ற புதிய திரைப்படக் கம்பெனியார், தங்களுடைய முதல் தயாரிப்பை விஜயா ஸ்டுடியோவில் துவக்கியுள்ளனர் ஜெமினி கணேசன் கதாநாயகனுக நடிக்கும் இப்படத்தில், சாவித்திரி நாகரிக மங்கையாகவும்,பட்டிக்காட்டுப் பெண்ணுகவும் இரட்டை வேடத்தில் தோன்றுகிருர்.

மற்றும் எம். ஆர். ராதா எஸ். வி. ரங்கராவ், ராமராவ் சந்தியா நடிக்கும் இப்படத்திற்கான கதை, வசனங்களை சோலைமலை எழுத, பாடல்கள் கண்ணதாசன் அமைக்க, கே. வி. மகாதேவன் இசைப்பொறுப்பேற்றுள்ளார். காட்சி ஜோடனைகள் சேகர் அமைக்க, கமால் கோஷ் ஒளிப்பதிவு செய்கிருர். ராமு தயாரிக்கும் இப்படத்தை, டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்கிருர்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!
மனேஹர், தேவிகா
நடித்த
பாஞ்சாலி



கிங்ஸ்லி (கொழும்பு
சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த
பாவ மன்னிப்பு

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
தூக்கு தூக்கி

மனேஹரா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன்
ஈ. வி. சரோஜா
நடித்த
என் தங்கை



இப்பொழுது காட்சியளிக்கிறது!
சாவகச்சேரி தேவேந்திராவில்
தினசரி 6-15, 9-30 மணிக்கு.
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி



தங்கவேலு
ராஜம்
பிரேம் நஸீர்



நடித்த
தங்கரத்தினம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.